கிருஷ்ணராயபுரம் ஊராட்சி ஒன்றியம்

*144 வினா—திரு. பெ. சௌந்தரபாண்டியன் : மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா :—

(அ) குளித்தலை வட்டம் கிருஷ்ணராயபுரம் ஊராட்சி ஒன்றியத்தில் நடந்த 6—5—1967 முதல் 15—2—1968-ஆம் தேதி வரை எத்தனை தீர்மானங்கள் போடப்பட்டன ?

(இ) அவைகளில் நிறைவேற்றப்பட்டவை எத்தனை ?

மாண்புமிகு திரு. மா. முத்துசாமி : (அ) 155 தீர்மானங்கள் போடப்பட்டன.

(இ) 107 தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டுள்ளன.

திரு. பெ. சௌந்திரபாண்டியன் : எஞ்சியுள்ள தீர்மானங்களின்மீதும் விரைந்து நடவடிக்கை எடுக்க இந்த அரசு துரிதமாகச் செயல்படுமா ?

மாண்புமிகு திரு. மா. முத்துசாமி : தீர்மானங்களை நிறைவேற்ற வேண்டிய பொறுப்பு ஊராட்சி ஒன்றியங்களைச் சார்ந்ததாகும். மீதியுள்ள 48 தீர்மானங்கள் பல்வேறு வடிவத்தில் நிறைவேற்றப்படும் தருவாயில் உள்ளன.

திரு. பெ. மலைச்சாமி : சில ஊராட்சி ஒன்றியங்களில் தீர்மானம் நிறைவேற்றிப் பல மாதங்கள் ஆகியும் பணிகள் செவ்வனே நடைபெறவில்லை. தீர்மானங்களை நிறைவேற்றிய நாளிலிருந்து குறிப்பிட்ட நாள் வைத்து அந்த நாளைக்குள் அதன்மீது ஏதாவது நடவடிக்கை எடுக்கவேண்டுமென்று அரசு உத்தரவு பிறப்பிக்குமா ?

மாண்புமிகு திரு மா. முத்துசாமி : தீர்மானங்கள் பல்வேறு ரூபத்தில் நிறைவேற்றப்படுகின்றன. பல்வேறு வகையான நிர்வாகச் சிக்கல்கள் இருக்கின்றன. ஆகவே, ஒட்டுமொத்தமாக ஒரு தேதிக்குள் முடிக்கவேண்டுமென்று சொல்வது நடைமுறைக்கு ஒத்து வராது.

திரு. ஆ. கருப்பையா : ஊராட்சி மன்றங்கள் தீர்மானங்கள் போடுவது போல் மாவட்ட வளர்ச்சி மன்றங்களும் தீர்மானங்கள் போட்டு அனுப்புகின்றன. அவ்வாறு தீர்மானங்கள் போட்டு அனுப்பி பல ஆண்டு காலமானாலும் நவடிக்கை எடுக்கப்படாமலே இருக்கின்றது. இனிமேலாவது உடனடியாக நடவடிக்கை எடுக்க வேண்டுமென்ற முறையை அரசு கொண்டு வருமா ?

மாண்புமிகு திரு மா. முத்துசாமி : மாவட்ட வளர்ச்சி மன்றம் ஒரு ஆலோசனைக் குழுதான். அது பல தீர்மானங்களைப் போட்டு அனுப்புகிறது. ஆனால் நிறைவேற்றப்படுகின்ற தீர்மானங்கள் நிறைவேற்றப்பட முடியாத நிலையிலே கோடிக்கணக்கான ரூபாய் செலவாகக் கூடிய தீர்மானங்களாகப் போகும் நிலையில் அரசு அதை நிறைவேற்ற முடியவில்லை. அதன் காரணமாகத்தான் இரண்டு மூன்று ஆண்டு காலமானாலும் முடிவு எடுக்க முடியாத சூழ்நிலை இருக்கிறது.

திரு. கொ. இர. ஞானசம்பந்தன் : ஊராட்சி ஒன்றியங்கள் தீர்மானங்களை நிறைவேற்றினாலும் அரசியல் காரணத்திற்காக அவற்றை நடைமுறைக்குக் கொண்டு வரமுடியாத நிலை இருக்கிறது. அம்மாதிரிச் சிக்கல்கள் எழும்போது அதைத் தடுக்க அரசு நட்வடிக்கை எடுக்குமா ?

மாண்புமிகு திரு மா. முத்துசாமி : அப்படிப்பட்ட சிலபல புகார்களும் வருகின்றன. அரசாங்கம் அவ்வப்போது பரிசீலித்து தேவையான நடவடிக்கைகளை மேற்கொள்ளும்.

திரு. கா. வேழவேந்தன் : அமைச்சர் அவர்கள் சொன்னவிவரப்படி சென்ற ஆண்டு பெப்ரவரி வரையில் இந்த ஊராட்சி ஒன்றியத்தில் நிறைவேற்றப்பட்ட தீர்மானங்களில் மூன்றில் ஒரு பங்கு தீர்மானங்களுக்கு

இன்னும் வழிவகை காணப்படவில்லை என்ற விவரத்தையொட்டி முன்பு அறிஞர் அண்ணா அவர்கள் குறிப்பிட்டதுபோல் மாவட்ட வளர்ச்சி மன்றங்களுக்கும் அதன் தலைவர்களுக்கும் அதிக அதிகாரங்களைக் கொடுத்து, இதற்கு வேண்டிய கண்காணிப்புக் கூட்டங்களை மூன்று மாதங்களுக்கு ஒரு முறையாவது நடத்தி அந்தத் தீர்மானங்களுக்கு வேண்டிய வழிவகைகள் காண்பதற்காக, அத்தீர்மானங்களை நிறைவேற்றுவதற்கு வேண்டிய வழிவகைகள் செய்யப்படுமா ?

மாண்புமிகு திரு மா. முத்துசாமி : தீர்மானங்கள் பல்வேறு ரூபங்களில் நிறைவேற்றப்படுகின்றன. சில தீர்மானங்களின்மீது நடைமுறையில் வேலைகள் நடைபெற்றுக்கொண்டிருக்கும். முடிவு பெற்றுவிட்டனவா என்று கேட்டிருந்தார்கள், ஆகவே முடிக்கப்பட்ட தீர்மானங்கள் பற்றிச் சொல்லியாகிவிட்டது. மற்ற வேலைகள் நடந்து கொண்டிருக்கும். எந்தத் தீர்மானமாவது இப்போது செயல்படுத்தப் படாமலிருந்தால் மாவட்ட ஆட்சித் தலைவர் அவர்களுக்கும், அவர் நேர் முக உதவியாளருக்கும் ஊராட்சி ஒன்றிய இயக்குநர் அவர்களுக்கும் அவ்வப்போது தணிக்கை செய்து நடவடிக்கைகள் எடுக்கத் தேவையான அதிகாரங்கள் வழங்கப்பட்டிருக்கின்றன.

வயலூர் பஞ்சாயத்துக்குச் சாலை வசதி

***145 வினா—திரு. பெ. சௌந்தரபாண்டியன் :** மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா :—

(அ) குளித்தலை வட்டம், வயலூர் பஞ்சாயத்தில் அடங்கிய கணக்கம் பட்டி, அரப்புளிப்பட்டி போன்ற கிராமங்களுக்குச் சாலை வசதியே இல்லை என்பது அரசின் கவனத்திற்குக் கொண்டுவரப்பட்டுள்ளதா ?

(இ) ஆம் எனில், எப்போது கொண்டுவரப்பட்டது ?

(உ) இதுவரை என்ன நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது ?

மாண்புமிகு திரு. மா. முத்துசாமி : (அ), (இ) & (உ) குளித்தலை வட்டம், வயலூர் ஊராட்சியில் உள்ள கணக்கம்பட்டி, அரப்புளிப்பட்டி கிராமங்களுக்குச் சாலை வசதி இல்லை என்பது அரசினர் நாட்டத்திற்குக் கொண்டுவரப்படவில்லை.

கணக்கம்பட்டிக்கும் அரப்புளிப்பட்டிக்கும் நடப்பு ஆண்டில் ஒரு புது சாலை அமைக்க கிருஷ்ணராஜபுரம் ஊராட்சி ஒன்றியம் முடிவு செய்துள்ளது.

திரு பெ. சௌந்தரபாண்டியன் : கணக்கம்பட்டி, அரப்புளிப்பட்டி பகுதிகளுக்குச் சாலை வசதியே இல்லை என்பதை நானும் நேரே அறிந்திருக்கிறேன். சம்பந்தப்பட்ட ஊராட்சி ஒன்றிய ஆணையர் அவர்களுக்கும் மனு மூலம் என்னுடைய என்டார்ஸ்மெண்ட் போட்டுக் கொடுக்கப்பட்டிருக்கிறது. மாவட்ட வளர்ச்சி மன்றத்தில் தீர்மானமும் தந்திருக்கிறேன். சம்பந்தப்பட்ட அமைச்சர் அவர்கள் என் தொகுதிக்குச் சுற்றுப் பயணம் வந்திருந்தபோது அந்தப் பகுதி மக்களும் மனுவும் கொடுத்திருக்கிறார்கள்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : கேள்வியைப் போடுங்கள். அங்கு நடந்ததைப்பற்றிச் சொல்லிக்கொண்டிருக்கக்கூடாது.

திரு பெ. சௌந்தரபாண்டியன் : அது இதுவரை அரசுக்கு என் வரவில்லை ?

மாண்புமிகு திரு மா. முத்துசாமி : அரசாங்கத்திற்கு அனுப்பப்படவில்லை. அதனால் வரவில்லை. இருந்தாலும் உறுப்பினர் அவர்கள் எடுத்துக் கொண்ட முயற்சியின் விளைவாகத்தான் அவர்கள் கோரிக்கை ஏற்கப்பட்டு இந்த ஆண்டு அந்தச் சாலையை அமைக்கத் திட்டமிடப்பட்டிருக்கிறது. ஆகவே உறுப்பினர் அவர்கள் அதுபற்றித் திருப்தியடையலாம்.